சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.24.01.2024

OS.No. 151/2020

PW 1 : சுகுமாரன் (வயது 46 ) த/பெ. கணேசன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

1,2 பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரை விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. 1 ஆம் பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பாக எனது தகப்பனாரை பார்த்து குணசேகரன் தாவா சொத்து விற்க இருப்பதாகவும், தயாதி பாகம் என்பதால் நீங்களே கிரயம் செய்து கொள்ளுங்கள் என்று கேட்டு கொண்டாரா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கும் குணசேகரனுக்கும் பேச்சு வார்த்தை உண்டா என்றால் உண்டு. பிராதுவில் சர்வே எண்.274/4பி 13 சொத்தில் காசிநாதன் அத்துமீறி உள்ளே நுழைய பார்த்தார் என்று சொல்லியுள்ளேன், அதனால் தான் நான் வில்லங்கம் பார்க்க சென்றேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி 2019 ஆம் ஆண்டில் மாதம் தேதி தெரியவில்லை மற்றொரு இடத்தில் மண் அள்ள போனார் அதை நான் தடுக்கபோனபோது, அடியாட்களை வைத்து என்னை மிரட்டினார் அதற்கான FIR ஆதாரம் என்னிடம் உள்ளது. எனது பிராதில் சர்வே எண் 274/4 பி 13 என்று கூறியுள்ளது சரியா தவறா என்றால் அது தவறு தான். சரியான சர்வே 117/4பி 13 என்பது தான் சரியானது என்றால் ஆமாம். சர்வே எண் 117/4பி 13 ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 5 1/2 ஏர்ஸ் ஆகும். இதில் எங்களுக்கு சொந்தமானது எவ்வளவு செண்ட் என்றால் 14 செண்ட் ஆகும். எனது பிராதில் 117/4பி 13ல் 43 செண்ட் எங்களுக்கு சொந்தமானது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எங்களுக்கு 117/4பி 8 என்ற புல எண்ணில் நிலம் உள்ளது என்றால் சரிதான். 117/4பி 8 ல் தான் எங்களுக்கு 43 செண்ட் உள்ளது என்றால் சரியல்ல அதில் 1 3/4 ஏக்கர் உள்ளது. 117/4பி 8 ல் எனது அம்மா சந்த்ரா சொத்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். 43 அல்லது 44 செண்ட் அதில் கிரயம் வாங்கினார். சரியாக தெரியவில்லை. 117/4பி 12 சொத்தானது 1 ஆம் பிரதிவாதிக்கு சொந்தமானதா என்றால் இல்லை. புல எண் 117/4பி 13 சொத்தில் 1 ஆம் பிரதிவாதிக்கு ஏற்கனவே 8 செண்ட் இருந்ததா என்றால் இல்லை. 117/4பி 13 சொத்தில் 5 செண்டு தான் தாவாவில் 3வது அயிட்டமாக கண்டுள்ளது என்றால் அது தெரியவில்லை. வா.சா.ஆ.4 தேதியிலேயே எனது தாயார் 1 ஆம் பிரதிவாதிக்கு வேறு ஒரு சொத்து தொடர்பாக அறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஞாபகம் இல்லை. நான் தான் அறிவிப்பு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படுவது தான் 28.08.2020 தேதியில் நான் 1 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படுவது தான் நான் அனுப்பிய மேற்படி நோட்டிசிற்கு 1 ஆம் பிரதிவாதி 03.09.2020 ல் அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணமாக புல எண். 117/4பி 8 ல் உள்ள 43 செண்ட் தொடர்பானது

என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.1 அறிவிப்பிலும் புல எண் தவறாக அனுப்பி உள்ளேன் என்றால் அது தெரியவில்லை. வா.சா.ஆ.3 நோட்டிசும் பி.வா.சா.ஆ.1 நோட்டிசும் ஒரே தேதியில் ஒரே வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது என்றால் ஒரே வழக்கறிஞர் தயாரித்தது தான் தேதி ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஆகியவற்றிற்கு விவரங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். எனது அம்மாவிற்கு விவரம் தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் சுப்ரமணி (எ) குணசேகரனுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 நோட்டிஸ் கொடுக்கும்போது எனது அம்மாவிற்கு எந்த விவரமும் தெரியாததால் தான் நான் அந்த நோட்டிசிற்கு விவரம் சொன்னேன் என்றால் சரிதான். எனது அப்பா உடல் நிலை சரியில்லாததால் வழக்கில் தரப்பினராக வரவில்லை. புல எண். 117/4 பி 8 ல் நானும் எனது தாயாரும் சேர்ந்து JCB கொண்டு மண் அள்ளினோம் என்றால் நாங்கள் அள்ளவில்லை. 1 ஆம் பிரதிவாதி தான் அள்ளினார். நாங்கள் மண் அள்ளியது தெரிந்து இலால்குடி RDO வந்து எங்களை எச்சரிக்கை செய்தார் என்றால் அது சரியல்ல. நாங்கள் மண் அள்ளும்போது RDO விற்கு தகவல் சொன்னது 1 ஆம் பிரதிவாதி தான் என்பதால் தான் அவர் மீது விரோதம் கொண்டு இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு மூல காரணமே மண் அள்ளியது தான் என்றால் அது சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர் குணசேகரன் என்பதால், அவர் ஏற்படுத்திய வா.சா.ஆ.1 ஆவணம் செல்லும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்திய வா.சா.ஆ.2 ஆவணமும் செல்லும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியாது எனக்கு அந்த ஆவண விவரம் தெரிந்த பிறகு தான் வக்கிலை சந்தித்தேன். எனது வழக்கு கால வரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. உரிய தரப்பினராக எனது தகப்பனாரை சேர்க்காததால் இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை - இல்லை)

*/signed/*
சுகுமாரன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

S VIJAYAKUMAR Digitally signed by S VIJAYAKUMAR Date: 2024.01.24 15:56:48 +0530

Sub Judge,
Lalgudi